Regd. No. M. 4593.

தனிப்பிரதி விலை { உள்நாடு 0-1-0 / பர்மா, மலேயா, 0-1-6 (...

குடி அரசு

Estd. 1924.

பக்கங்கள் 8. சனி வெளியீடு. வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0 / வெளிநாடு ரூ. 7-0-0

மாலை 20 } சனி 26-4-1947 சித்திரை 13உ. { மலர் 2

ஆரியம் பேசுகிறது!

["குகு"]

[இடம்:- திருவல்லிக்கேணி கடற்கரையோரம். மாலை 6 மணி. குளிர்ந்த கடற்காற்று வீசுகிறது. விஸ்வனாதய்யர் துண்டைவிரித்து மணலில் படுக்கிறார். ராமச்சந்திரய்யர் அன்றைய "தினமணி"ப் பத்திரிகையைக் கையில் விரித்துப் பிடித்தபடியே, படிப்பதை நிறுத்திவிட்டுப் பேசுகிறார்:-]

விஸ்:- ஏமய்யா! பேப்பர்லே ஏதாவது விசேஷமுண்டோ?

ராம:- ஒண்ணுமில்லே! ஏதோ, பாஷாவாரியா மாகாணங்களைப் பிரிச்சுப்பிடணுமின்னு அசெம்பிளியிலே முடிவு செய்திருக்கா.

விஸ்:- அப்போ, இந்தத் தெலுங்கன் தொல்லை ஒழிஞ்சுதுன்னு சொல்லுங்கோ! அப்பப்பா! இந்தப் பிரகாசம் வந்தார், மெட்ராஸைப் பார்த்தா பெஜவாடா மாதிரின்னா இருந்தது! எங்கே போனாலும் ஒரே தெலுங்காளா கூடண்டு ஹதம்பண்ணீண்டு இருந்தா ஓய்!

ராம:- போங்காணும், போம்! உமக்கென்ன தெரியும்? தெலுங்கனாவது தமிழனாவது, அதைப் பற்றி நமக்கென்ன கவலை?

விஸ்:- அதென்ன ஓய், அப்படிச் சொல்றீர்? நாமெல்லாம் தமிழாளில்லையோ? தமிழ்தானே பேசுகிறோம்? நம் தாய்பாஷை தமிழ்தானே? அதிலகூடவா சந்தேகம்?

ராம:- என்ன சொன்னீர்? தாய் பாஷையா? நமக்குத் தாய்பாஷை சமஸ்கிருதம். [illegible] வயிற்றுப்பிழைப்பு பாஷைதானே! இது தெரியாதா உமக்கு?

விஸ்:- அப்படீன்னா தமிழ் மாகாணம் தனியாப் பிரிஞ்சா நமக்கெல்லாம் நல்லதுதானே?

ராம:- ஆஹா! அதிலென்ன சந்தேகம்? இங்கிலீஷ்காரன் இருக்கிறவரைக்கும் இங்கிலீசைப் படிச்சு சம்பாதிச்சோம். ஏழு வருஷத்துக்கு முன்னே ஹிட்லர் ஜெயிச்சுடுவான் போல இருந்தது; ஜர்மன் பாஷை படிச்சோம். அவனோ தோத்துப்போயிட்டான். இனி, இங்கிலீஷ்காரனும் போயிடப் போறான்! காங்கிரஸ்காரர் ஆட்சியிலே ஹிந்திக்குத்தான் செல்வாக்கு அதிகமாயிருக்கும்! அதுக்காகத்தான் நம்ம பையன்களெல்லாம் மும்முரமா ஹிந்தி படிச்சிண்டிருக்காங்கள்! சமஸ்கிருதம் படிக்கிறவாளுக்கு ஹிந்தி என்னா வருமோன்னோ? இந்தச் சூத்திரப்பயதான் ஹிந்தி படிக்காமே அவஸ்தைப்படப் போறானுக!

தமிழ் மாகாணத்திலே தமிழுக்கு அதிகச் செல்வாக்கு ஏற்பட்டா, எல்லாரும் தமிழைப் படிச்சுட்டுப் போறோம்! இதென்ன பிரமாதம்?

விஸ்:- தமிழ்நாடு தனியாப் பிரிஞ்சா நம்மவாளுக்கு கஷ்டம் எதுவும் இருக்காதே!

ராம:- ஒண்ணும் இருக்காது. நாமும் தமிழர்தான் அப்படீன்னு அவங்களே ஒப்புக்கொண்டிறாளு கண்ணே! அப்புறம் என்ன ஆட்சேபணை? இந்தப் பாஷைச் சண்டை [illegible]

இந்த ஆபத்திலிருந்து மீட்கப் [illegible]
கிறதுக்காணும்! தெரியுமா? [illegible]
றேன், கேளும்! பாஷைச்ச[illegible]
ஹிந்து—முஸ்லிம் சண்டை, [illegible]
லாளி—தொழிலாளிச் சண்[illegible]
இப்படியெல்லாம் கிளப்பி[illegible]
டுட்டா, நாம் தேவமேன்னு இ[illegible]
லாம்! சூத்திரப் பயலுகளே அ[illegible]
சுண்டு சாவான்கள்! நம்[illegible]
வான்னே படிச்சவாளெல்[illegible]
வக்கீலாயும், மந்திரியாயும், ஜ[illegible]
யும் இருந்துண்டு சமாதா[illegible]
செய்து வைக்கிறாப்போலே [illegible]
செய்திண்டிருக்கலாம். தெ[illegible]
நாட்டிலே இருக்கும் பிராம[illegible]
ளும், "அதோ பார் தமிழ[illegible]
ஊருக்குள்ளே விடாதேயும்[illegible]
விரட்டுங்களே!" அப்படி [illegible]
சொல்லி அவாபாட்டுக்குப் பி[illegible]
சுண்டிருப்பா?

விஸ்:- அப்பாடி! இப்பத்[illegible]
ஓய், என் மனசு நிம்மதியா[illegible]
நான் நேற்றைக்கு ஸ்ரா[illegible]
செய்து வெச்சுட்டு திரும்பி[illegible]
சமயத்திலே யாரோ ஒரு கருப்[illegible]
சட்டைக்காரன் என்னை [illegible]
றைச்சுப் பார்த்தாங்காணு[illegible]
எனக்கு அப்படியே வயிறு [illegible]
பிடுத்து! அவாளெல்லாம் பி[illegible]
ணாளுக்கு விரோதியாமே! அப்ப[illegible]
தான் வைத்தியநாதய்யர் செ[illegible]
ரார்! இல்லாவிட்டா [illegible]
சொன்னா தெரியும்?

ராம:- அப்படியா? அவ[illegible]
ஏன் சும்மாவிட்டீர்? 'ஐ[illegible]
அடிச்சுட்டானே! கொல்றா[illegible]
கொல்றானே!"ன்னு சும்ம[illegible]
வது கூச்சல் போட்டிரானா[illegible]
பேர் கூடிடுவாளே! அவ[illegible]
போலீஸ் ஸ்டேஷனுக்கு அ[illegible]
சிண்டுபோய் ஒரு ரிப்போர்[illegible]
கொடுத்துட்டா நம்ம சப்[illegible]
பெக்டர் ரெங்கநாதய்யர் [illegible]

லாகாவே நம்மனவாளுது
னே!

விஸ்:- அப்டீன்னா அவ்வளவு
பால்லாதவனுகளா அந்தப்பய
க? ரேக்கு அப்போதே தெரிஞ்
ந்தா.........

ராம:- போங்காணும் போய்!
னெல்லாம் திராவிட கழகத்
தச் சேர்ந்தவங்க. தெலுங்கன்,
மிழன், மலையாளி, கன்னடி
ன எல்லோரும் ஒரே இனமாம்!
ராமணான்மட்டும் ஆரிய இன
ம்! நம்பளவாள் அவர்மேலே
லை ஏறிச் சவாரிசெய்யுறோ
ம்! கீழே இறக்கிவிடனுமாம்!
வங ஜெபிச்சானுகளோ, அவ்
வுதான் நம்ப கதி! நம்மளை
ளை பிறகு பிளக்கச் சொல்லு
ன்! வண்டிஓட்டச்சொல்வான்!
ராகிதாளையெல்லாம் வய
லே இறக்கி உழச்சொல்வான்!
போ! அதை ஏன் கேட்கிறீர்!
ாவிட கழகத்துகாரனாலேதான்
க்கு ஆபத்துவந்தால் வரும்!
க்கியார் வந்தாலும் நம்பமேலே
ு சிறு துரும்புகூட விழாது!
!

விஸ்:- இந்தப் பயலுக செல்
க்குப் பெறாமல் இருப்பதற்கு
ாவது வழியிருந்தால் சொல்
மே! லட்சார்ச்சனை செய்யட்
மா?

ராம:- லட்சார்ச்சனையா? அதெல்
ம் அவங்களை அசைக்கவே
சைக்காது. கோயில் இருக்கிற
டத்திலே ஆஸ்பத்திரி வைக்கணு
ன்னு சொல்கிறவனுகளாச்சே!
தக் கூட்டத்துக்கு இப்போ
கச் செல்வாக்கு ஏற்பட்
ண்டே இருக்கு! காங்கரஸ்கார
லேயே ரொம்பப்பேர் அதிலே
சர்ந்திண்டிருக்கா! இதுக்காக
ம் பெரியவாள்ளாம் ஒரு ஏற்
டு செய்துண்டிருக்கா! "தமிழ்
டு தனியாப் பிரியவேணும்;
மிழ் பேசுறாவாளெல்லாம் தமி
ர்", அப்டீன்னு ஒரே போடா
பாட்டிருக்கா! இந்தத் தீ புடிச்
ண்டுதோ, நம்பபாடு பலே ருஷி
ன்! எப்போதும் போலவே
ந்தச் சூத்திரன்களைக் காலடியி
லயே போட்டு மிதிச்சுண்டிருக்
லாம். தீ அணைஞ்சதோ, திரா
ட கழகத்தான் கைமேலே போ
டும்! ஓய்! ஜாக்கிரதை! இனிமேல்
ம்பளவாளுக்கு உள்ள காரியத்ரி
ஜெபம் எது தெரியுமோ? "தமிழ்
நாடு தமிழருக்கே" என்பதுதான்!
இதை விடாதேயும்! எங்கே பார்த்
தாலும் சொல்லிண்டே இரும்!
ஜாக்கிரதை! பழைய காயத்ரி
ஜபத்தைக் கொஞ்சகாலத்திற்கு
நிறுத்திவையுமே! என்ன மோசம்?

(இந்தச் சமயத்தில் யாரோ ஒருவர் இருமும் சத்தம் கேட்டுத் திரும்பினர். அதே கருஞ்சட்டைத் தோழர் பக்கத்தில் நெருங்கிவந்து கொண்டிருந்தார். ராமச்சந்திரய்யர் திடுக்கிட்டார்! வந்த தோழர் தான் ராமச்சந்திரர் ஆபீசில் வேலை பார்க்கும் சகபாடிகுமாரஸ்தாவான வடமலை! பேச்சு நின்றது!

சாத்தூர் கலவர வழக்கு முடிவு

கீழ்க்கோர்ட்டில் தண்டிக்கப்பட்ட நமது தோழர்கள் சேஷன்சில் விடுதலை செய்யப்பட்டனர்

சாத்தூர் இரத உத்சவத்தில் கலவரம் செய்ததாக நமது (க. ச. ப.) தோழர்கள் கீழ்க்கோர்ட்டில் தண்டிக்கப்பட்ட செய்தியை நமது தோழர்கள் அறிவர். கீழ்க்கோர்ட்டில் தண்டிக்கப்பட்ட தோழர்கள் தாங்கள் குற்றவாளிகள் அல்ல என்று செஷன்ஸ் கோர்ட்டில் அப்பீல் செய்தனர். செஷன்ஸ் கோர்ட் விசாரணையில் அவர்கள் குற்றவாளிகள் அல்ல என்று விடுதலை செய்யப்பட்டனர். நமது தோழர்களின் சார்பாகத் தோழர் அட்வின் பெரியநாயகம் ஆஜரானார்.

கடம்பூரில் பெரியார் தேதி மாற்றம்

பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் சென்னைக்கு அவசரமாகப் போகவேண்டியிருப்பதால் கடம்பூரில் 25-4-47ல் நடக்கவிருந்த பொதுக்கூட்டம் 28-4-47 அன்று நடைபெறும் என்று அறிவித்துக் கொள்கிறேன்.

அன்பன்
கே. வி. கே. சாமி,
செயலாளர், நெ. மா. தி. க.

ஸ்வீகார விழா

2-5-47 தேதி வெள்ளிக்கிழமை மாலை 6மணிக்குமேல் ஈரோடு ஆச்சி விலாசில் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் தலைமையில் தோழர் பி. ஷண்முகவேலாயுதம் அவர்கள் தனது தங்கையின் இளையமகனை ஸ்வீகாரம்செய்து கொள்ளும் விழா நடைபெறும்.

திருப்பூரில் பொதுக்கூட்டம்

27-4-47 ஞாயிறன்று தோழர் எஸ். ஆர். சுப்ரமணியம் அவர்கள் தலைமையில் நடைபெறும். அதுசமயம் விருதுநகர் எ. வி. பி. ஆசைத்தம்பி, திருச்சி டி. கே. சீனிவாசன், ஈரோடு அபிபுல்லா சேலம் ப. திருநாவுக்கரசு, குழந்தை ஆகிய தோழர்கள் சொற்பொழிவாற்றுவர்கள்

வெளிவந்து விட்டது! விற்பனைக்குத் தயார்!!

இராவணகாவியம்

ஆசிரியர்—குழந்தை.

சிறப்புப்பாயிரம்—கவி பாரதிதாசன் அவர்கள்.

7பக்க ஆராய்ச்சி. முன்னுரை—தளபதி அண்ணாதுரை M.A. அவர்கள்.

இராம இராவணப்போர்— ஆரியர் தமிழர் போர் எனும் உண்மை கூறி, இராமாயணத்தால் தமிழர்க்குண்டாகிய இழிவைப்போக்கி, இனவுணர்ச்சி யூட்டும் சமயச் சார்பற்ற தமிழ்ப்பெருங் காவியம்.

'நான் படித்தறியும்படி பாட்டுக்கள் எளிதாக இருக்கவேண்டும்'' என்ற பெரியார் ஈ. வெ ரா. சொற்படி அமைந்த எளிய இனிய 2828 தனித்தமிழ் விருத்தப்பாக்கள். டிம்மி 520 பக்கம்.

உயர்ந்த பதிப்பு காலிகோ பைண்ட், கண்கவர் அட்டை, விற்பனையாளர்க்குத் தக்க கழிவுண்டு. தனிப்பிரதிக்குத் தபால் கூலி 10-அணா.

விலை ரூ. 6.

கிடைக்குமிடம்:-

சிவலிங்க விலாச புத்தகசாலை, ஈரோடு.

திராவிடர் கழகத் தோழர்களுக்கு

மாணவர் பிரச்சாரக் குழுவினர் மே மாதம் இரண்டாவது வாரத்திலிருந்து தமிழ்நாட்டின் பல ஜில்லாக்களிலும் பிரச்சாரம் செய்ய வருகின்றனர். நன்றாய்ப் பேசுந் திறமையுள்ள மாணவர்களையே ஜில்லாவுக்கு இருவர் அல்லது மூவர் வீதம் பிரித்தனுப்பப்படும். திராவிடர் கழகத்தோழர்கள் உள்ள ஒவ்வொரு இடத்திலும் தவறாது இச்சந்தர்ப்பத்தில் கூட்டம் நடத்திக்கொள்ள வேண்டுகிறேன். தோழர்கள் அதிகமாகக் கூட்டங்கள் அமைத்துக் கொடுத்தால்தான் மாணவர்களும் உற்சாகமாகப் பிரச்சாரம் செய்யக்கூடும். ஆண்டு முழுவதும் படிப்புக்காகக் கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் உழைத்து அலுத்த மாணவர்கள் தங்களுக்குக் கிடைத்த அரிய ஒன்று அல்லது இரண்டுமாத ஓய்வு காலத்தில் இனவுணர்ச்சியால் உந்தப்பட்டுப் பிரச்சாரத்திற்குச் செல்ல வருகிறார்களாதலால் அவர்களை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்வது இயக்கத்தோழர்கள் கடமையாகும்.

கூட்டம் அமைக்க விரும்பும் தோழர்கள் கீழுள்ள மாவட்ட பிரச்சார அமைப்பாளர்களுக்கு உடனே தெரிவித்துக்கொள்ள வேண்டுமாய் வேண்டிக்கொள்கிறேன்.

முகவரிகள்:

1. சென்னை & செங்கல்பட்டு.
   என். வி. நடராசன்,
   18, பெருமாள் முதலி தெரு,
   பெத்துநாய்க்கன்பேட்டை,
   ஜி. டி., சென்னை.
2. தென்னாற்காடு:
   புலவர் ஙா. மு. மாணிக்கம்,
   தமிழாசிரியர், ஆர். சி. டி.
   உயர்நிலைப்பள்ளி, சிதம்பரம்.
3. வட ஆற்காடு:
   ஈ. திருநாவுக்கரசு,
   4, ஆசா பசார்,
   வேலூர் (வ. ஆ.)
4. தஞ்சை:
   வி. எஸ். பி யாகூப்,
   விசயபுரம், திருவாரூர்.
5. திருச்சி:
   டி பி வேதாசலம்,
   வக்கீல், தென்னூர், திருச்சி.
6. மதுரை:
   டி ஆவுடையப்பன்,
   பஜனை இல்லம்,
   சோழவந்தான்.
7. ராமநாதபுரம்:
   எஸ். எஸ். பழனிசாமி,
   மெயின் பசார்,
   அருப்புக்கோட்டை.
8. சேலம்:
   ஆர். எஸ் அருணாசலம்,
   ஜவுளி வியாபாரம்,
   செவ்வாப்பேட்டை, சேலம்.
9. கோவை:
   என். இ. பாலகுரு,
   பட்டக்காரர் பங்களா,
   ஈரோடு.
10. திருநெல்வேலி:
    கே. வி. கே. சாமி,
    62, விக்டர் தெரு,
    தூத்துக்குடி.

இங்ஙனம்: செயலாளர்,
மத்திய திராவிடர் கழகம், சென்னை.

மாணவர் பிரசாரம்

அறிவிப்பு

1-5-47ல் ஈரோட்டில் மாணவர் பயிற்சி வகுப்பு பெரியார் அவர்களால் துவக்கப்பெறும். சுமார் 1வாரம் வரை நடைபெறலாம்.

மாணவர்களின் படிப்பு, பிரச்சார அனுபவம், பிரச்சாரத்தில் கலந்துகொள்ளும் காலம் இவைகளை யொட்டி சுமார் 100 மாணவர்களுக்கு அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது. அழைப்புபெறும் மாணவர்கள் யாவரும் தவறாது வர வேண்டுகிறேன். மாணவரல்லாத ஒரு சில இளைஞர்களுக்கும் பேச்சாளர்களுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது.

பயிற்சி வகுப்புக்கு வரும் ஒவ்வொரு மாணவரும் படுக்கை, போதிய உடை முதலியவைகளுடனும், குறைந்தது இரண்டு கருப்புச்சட்டைகளுடனும் ஷை தேதியில் வரவேண்டுகிறேன். கருப்புச் சட்டை இல்லாதவர் இரண்டு கருப்புச் சட்டைகள் வாங்குவதற்குரிய பணம் கொண்டுவர வேண்டுகிறேன்.

பிரச்சாரத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படும் தோழர்கள் பிரச்சாரத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மாவட்டங்களுக்குப்பிரித்து அனுப்பப்படுவார்கள்.

பொட்டிரெட்டிப்பட்டிக்குப் பெரியார் வருகை

மே மாதம் 3ந்தேதி சனிக்கிழமையன்று சேலம் மாவட்டம் நாமக்கல் தாலுக்காவைச் சார்ந்த பொட்டிரெட்டிபட்டிக்குப் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் வருகிறார்.

திராவிடமாணவர் பேச்சுப் போட்டி

வெள்ளிக்கோப்பைகள் பரிசு

ஈரோட்டில் நடைபெறும் திராவிட மாணவர் பிரச்சாரப் பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ளும் மாணவர்களிடையே ஓர் பேச்சுப்போட்டி நடைபெறும். போட்டியில் முதன்மையில் வெற்றி பெறும் மாணவருக்கு ஒரு பெரிய வெள்ளிக்கோப்பையும், இரண்டாவதாக வெற்றிபெறும் மாணவருக்கு ஒரு வெள்ளிக்கோப்பையும் கோவை மாவட்ட திராவிடர் கழகச் செயலாளர் தோழர் எஸ். ஆர். சந்தானம் அவர்களால் அளிக்கப்படும்.

*

பயிற்சி வகுப்பில் கீழ்க்காணும் பொருள்களைப்பற்றித் திராவிடர் கழகத் தலைவர் தோழர் டி. பி. வேதாசலம் பி. ஏ. அவர்களால் மாணவர்களுக்கு விளக்கிச் சொல்லப்படும்.

1. திராவிடநாடும் அதன் மக்களும் (இவர்களின் சரித்திரம் தொன்றுதொட்டு இன்றுவரை)
2. அரசியல் அமைப்புகளும் ஜனநாயக அரசியலின் முக்கியங்களும்.
3. பொருளாதார அமைப்புகளும் நம்நாட்டிற்கு அவைகளை எவ்வாறு அமைத்தலென்பதும்.
4. சுயமரியாதை இயக்கமும் அதன் முக்கியமும், அவசியமும்.
5. இந்தியநாடும், பிரிட்டிஷ் ஆட்சியும், எதிர்கால அரசியலும்.
6. திராவிடர் கழகங்களும், நம் வேலையும்.
7. பிரசாரத்தின் அவசியம்.
8. நல்வாழ்க்கை.

அமைப்பாளர்,
திராவிட மாணவர் பிரச்சாரக்குழு,
42, கச்சேரிவீதி, ஈரோடு.

குடி அரசு

1947-ஆம் ஏப்ரல் 26உ

காங்கரசின் யோக்கியதை

காங்கரஸ் இயக்கம் இந்நாட்டு ஏற்பட்டதற்குக் காரணம், நாட்டை ஆண்டிருந்த சமூகா ங்களை அடக்கியாளவே யென் சரித்திர சான்றாகும். இதைப் ரியார் அவர்கள் பல பொதுக் ட்டங்களிலே ஆதாரபூர்வமாக த்துக்காட்டியபோது நம் காங் ஸ்திராவிடர்கள் ஒப்புக்கொள்ள த்தனர். இந்நாட்டை ஆண்ட விட சமுதாயத்தினர் வெள் யனிடம் அடங்கி நடக்கா ந்தபோது பார்ப்பனர் துணை ண்டு வெள்ளையரால் ஆரம் கப்பட்டதுதான் காங்கரஸ் க்கம். நாளாவட்டத்தில் அது ிய இயக்கம் என்ற பேரால் களிடையே செய்யப்பட்டு பிரசார பலத்தால் வலுப் ற்றது. பெரும்பாலும் அதன் ர்ச்சிக்கு உழைத்து நஷ்ட ட்டங்கவர்கள் திராவிடரேயாவர். ங்கரசின் திட்டம் கடைசியாக ள்ளையனிடமிருந்து அதிகாரத் க் கைப்பற்றுவதென்ற நிலை மாறியது. அவ்வித அதிகாரத் யும் வடநாட்டுக்காரனே பெறு தன்ற ரகசிய ஒப்பந்தத்தை ப்படையாகக் கொண்டே று சமரசம் செய்யப்படுவதும் கார மாற்றம் செய்யப்படுவது கயிருந்துவருகிறது.

"அகில இந்தியம்" என்ற மோச லையில் திராவிடன் ஏமாந்து று வடநாட்டுக்காரனுடைய ங்கீதத்துக்குத் தலைகுனிகிறான். மட்டுமல்ல. இவ்வளவு பிற் க்கடைந்தும் சொரணை ன்றிப் புதிய அரசியல் நாட்டுடன் தொடர்பு ன்றும் 'அ' பிரிவிலிருக்கவும் ஆட்டுகின்றனர், காங்கரஸ் விடர்கள். இவர்களை எடுத் ரத்துத் திராவிட இனஉணர்ச்சி றுங்கள் என்று நம் தலைவர் ரியார் அவர்களும், திராவிடர் தெல்லாம் காங்கரஸ் திராவிடர் நயமையே அடிப்பதும், ஏசுவதும், பலாத்காரச் செய்கையிலிறங்குவதுமான நாசவேலையிலேயே காலத்தைக் கழித்தனர்.

கடைசியாக இன்று காங்கரசின் யோக்கியதை வெட்ட வெளிச்சமாகும்போதாவது நமது காங்கரஸ் திராவிடர்கள் உண்மையை உணர ஆரம்பித்திருப்பதைக்கண்டு உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறோம்.

காங்கரஸ் என்ற பெயரின் பேரில் நமக்கு எப்போதும் வெறுப்பில்லை. ஆனால் அது வடநாட்டானின் ஆதிக்கம் நிறைந்ததும் பார்ப்பனரின் நயவஞ்சகம் கொண்டதுமான ஓர் விஷப்பெட்டிக்கு ஒப்பானது; நம்நாட்டுத் தொழிலைத் தலையெடுக்கவொட்டாமல் தடுக்கும் வடநாட்டானின் ஆதிக்கமும் நம்நாட்டுக் கலை, கல்வி, மொழி, ஒற்றுமை, பண்பு ஆகியவைகளை முன்னேறாமல் தடுக்கும் பார்ப்பனீயமும் சேர்ந்து உருவானதுதான் காங்கரஸ். இன்னும் கூறலாம் இந்நாட்டுத் தொழிலாளர் இயக்கத்தை அடியோடு ஒழிக்கவே ஆதியிலிருந்து திட்டமிட்டு அதற்கேற்ப வேலைசெய்துவந்த ஸ்தாபனம் காங்கரஸ் என்று நாம் இதை அன்று எடுத்துக்கூறியபோது நம்மை துரோகிகள் என்றனர் தொழிலாளர்கள். ஆனால் இன்று காங்கரசின் பாசிச சொரூபத்தைத் தொழிலாளர் காண்கின்றனர். இவையெல்லாம் கண்டால்; கேட்டால் போதுமா?

நமக்குத் தோழர் காமராஜரும் கூடத்தான் காங்கரசைக் கலைத்துவிடவேண்டும் என்று மனம்விட்டுக்கூறியிருக்கிறார், அதனின் விபரீதப் போக்கையும் அதற்கு ஒரு நிலையான உறுதியான கொள்கையும் இல்லையென்பதை அறிந்த காரணத்தால். இன்னுங் கூறவேண்டுமானால் காங்கரஸ் பதவியேற்றதற்குப்பின் காங்கரஸ் மந்திரிகள் லஞ்சக்காரர்கள் என்று பகிரங்கமாகவும், சட்டசபையிலும் இன்று பேசப்படுவது போன்று இதற்குமுன் எந்த ஆட்சியிலும் பேசப்படவில்லையே.

ஜஸ்டிஸ் கட்சியினரை அதிதீவிர சென்ற தோழர் சத்தியமூர்த்தி அய்யர்கூட ஜஸ்டிஸ்கட்சி ஆட்சியினரை வேண்டுமானால் காங்கரஸ் அகராதி படி, வழக்கப்படித் தேசத்துரோகிகள் என்று தப்பட்டை அடித்துச் சென்றாரே தவிர அந்த மந்திரிகள் லஞ்சம் வாங்கினார்கள், அவர்களின் நிர்வாகம் சரியில்லையென்று கூறியதில்லையே.

ஆனால் இன்று காங்கரஸ்ஆட்சியின் யோக்கியதை சட்டசபையிலிருந்தும், கவர்னர் மாளிகையிலிருந்தும், கடைத்தெருவு வரை ஒரே நாற்றமெடுக்கிறதே! இது நமது மாகாணத்துக்குப் பெரும் இழுக்கல்லவா? இதைப்பற்றித்திராவிடர்களுக்குத்தானே அக்கரையிருக்கவேண்டும். எந்தக் காங்கரஸ் திராவிடராவது இவைகளைப் போக்க நடைமுறையில் எதாவது செய்தார்களா இன்றுவரையில்? வெறும் வேதாந்தம் பேசிக்கொண்டு காங்கரஸ் கெட்டுவிட்டதே என்று முகாரி ராகம் பாடினால் நம்நாட்டு நிர்வாகம் சரிசெய்ததாய்க் கூறிவிடமுடியுமா? அல்லது மக்களுக்கு நன்மை பயக்குமா? இம்மாதம் 20ந்தேதி சென்னையில் நடைபெற்ற த. நா. காங்கரஸ் கமிட்டிக்கூட்டத்தில் கலந்துகொண்ட ஒவ்வொருவரும் இன்றைய காங்கரசின் போக்கையும், கொள்கையில் உறுதியில்லாத நிலையும், ஆட்சியின் விபரீதப் போக்கையும் எடுத்துக்கூறி இழவு வீட்டில் துக்கம் தெரிவிப்பது போன்று பரிமாறிக்கொண்டனர். ஆனால் இவ்வளவும் காங்கரஸ் திராவிடர்களேயன்றிப்பார்ப்பனர் எவரும் வாய்பேசவில்லை. தோழர் வைத்தியநாதய்யர் போன்றவர்கள் திரைமறைவில் ஆசிடுதத்தம் புரிந்தனர். இதைப் பார்த்தாவது நமது காங்கரஸ் திராவிடர் செயலில் இறங்கவேண்டாமா?

இன்று காங்கரஸ் பெயரால் துரோகிகளுக்கும், கிரிமினல் குற்றம் புரிந்தவர்களுக்கும், லஞ்சம் வாங்கியவர்களுக்கும், ரிட்டையரான பார்ப்பனர்களுக்கும் உத்தியோகங்கள் பாதம் ஹல்வா போன்று வழங்கப்படுகின்றன. இவ்வளவும் எதன்பேரால்? நம அருமை காங்கரஸ் திராவிடன்

பட்டதடியடியின் பேராலும், சிறை சென்றதன் பேராலும், வந்த பெருமை இவ்வாறு பரிமாறப்படுகிறது துரோகிகளுக்கு; அதுவும் பார்ப்பனர்களுக்கு.

சட்டமறுப்பு இயக்கத்திலே அரசியலார்க்கு சட்டத்தைப் புரட்டிக் காண்பித்து உதவிசெய்த சர் அல்லாடி அய்யருக்கு அதே காங்கரசின் பேரால் அ. கி. சபையில் பதவி; பிற்போக்கான நிலையிலுள்ள சமஸ்தானாதிபதிகளுக்கு உற்ற துணையாயிருந்த சர் கோபால்சாமி அய்யங்காருக்குக் காங்கரஸ் பேரால் பதவி; காங்கரஸ்காரர் அந்நியநாட்டு சாமான்களைப் பகிஷ்காரம் செய்து சிறைவாசம் சென்ற சமயம், அந்நிய சாமான்களுக்கு ஏஜண்டாயிருந்த டி. டி. கிருஷ்ணமாச்சாரிக்கு இன்று பதவி; ஆகஸ்டு கலவரத்தில் நமதருமை காங்கரஸ் தோழர்கள் சிறைசென்றபோது அவர்களுக்கு அரசியல் ஞானமில்லையென்று கம்பி நீட்டிய பிரிட்டிஷ் தாசர்களுக்கு இன்று மந்திரி பதவிகள். அதேபோன்று ஒவ்வொரு துறையிலும், இவர்களைவிட எந்த வகையில் சர் சண்முகமும், சர் ராமசாமியும், சர் சி. ஆர். செட்டியும், ராமலிங்கஞ் செட்டியாரும் நாட்டுக்குத் துரோகம் செய்தவர்கள்? இவர்களின் அரசியல் ஞானத்துக்கு அகில உலக புகழுக்கு மேற்சொன்னவர்கள் ஈடுபோட முடியாதே. இவர்களையாவது விட்டுவிடுங்கள். காங்கரசிலேயேயுள்ள முத்துராமலிங்கத் தேவர், வல்லத்தரசு, திருச்சி தேவர், இன்னும் பல திறமைசாலிகளிருக்க, ஆகஸ்டு துரோகிகளா மந்திரிகளாகவேண்டும்? உண்மையிலே காங்கரசிலுள்ள திராவிடர்களுக்கு தன்மான உணர்ச்சியிருக்குமானால் இவ்வித கொடுமைகளை, அநீதிகளை, ஜாதிக்கொரு நீதி—அதுவும் காங்கரஸ் துரோகிகளுக்குப் பதவிகள் அளிப்பதை எதிர்த்திருக்கவேண்டாமா?

தோழர் பண்டித ஜவஹர் முதல் பெரிய காங்கரஸ் தலைவர்களனைவரும் காங்கரசிலே ஒழுங்கில்லை, நேர்மையில்லை என்று நாள் தவறாமல் சொல்லி வருகையில் அப்பேர்ப்பட்ட காங்கரசில் திராவிடன் இனியும் இருப்பதென்றால் அவன் தன்மானத்தை விலைக்கு விற்றுவிட்டவனாகவோ அல்லது நமது திராவிட சமுதாயத்தின் விரோதியாகவோதானே இருக்க முடியும்?

அதுவும் இன்று ஏழைத் தொழிலாளரை, விவசாயிகளை அடக்க (பொதுஜன பாதுகாப்பு) என்ற பேரால் அடக்குமுறைச்சட்டம், 144 உத்திரவு, துப்பாக்கிப் பிரயோகங்கள், தாய்மார்மீது கண்ணீர்ப்புகை, கூலி உயர்வு கேட்டால் தடியடி இவ்வளவும் காங்கரசின் பேரால் நடக்கிறதே, அதைப் பார்த்துக் காங்கரஸ் பார்ப்பானுக்குக் கும்மாளமாயிருப்பது இயற்கையென்றாலும் காங்கரஸ் திராவிடர் சொரணைகெட்டிருக்கின்றனரே, இதைவிட மானக்கேடு வேண்டுமா?

தொழில்மந்திரியாக இன்றுள்ள டாக்டர் ராஜன் வேலைநிறுத்தத்தில் வேலைசெய்த கருங்காலிகளுக்குப் பரிசுகொடுக்கும் "புனித சேவை"யைச் செய்கிறாரே! அதுவும் காங்கரஸ் பேரால்! அப்பேர்ப்பட்ட காங்கரசைத் தோழர் காமராஜர் கூறுவது போன்று சலைக்கப்படுவது மட்டுமல்ல, கல்யாணசுந்தர முதலியார் கர்ஜிப்பது போன்று ஒழித்தேயாகவேண்டுமென்பது காங்கரசிலுள்ள கண்ணியமுள்ள திராவிடர்களின் முதல் வேலையல்லவா?

காங்கரஸ் திராவிடர்கள் திராவிடர் கழகத்தில்கூட சேரவேண்

கிருஷ்ணன்—பாகவதர் விடுதலை

★

25-4-47 காலை 11மணிக்குச் சென்னை ஹைகோர்ட்டில் கலைவாணர்கள் என். எஸ். கிருஷ்ணன் எம். கே. தியாகராச பாகவதர் ஆகியோர் விடுதலை செய்யப்பட்டனர் என்று தீர்ப்புக்கூறப்பட்டது. இரண்டு ஆண்டுகளாகப் பொதுமக்கள் கிருஷ்ணன்—பாகவதர் விடுதலையடைய வேண்டுமென்று மிக ஆவல் உள்ளவாயிருந்தனர். இப்போது விடுதலை அடைந்துவிட்டனர் என்ற செய்தியைக் கேட்டுப் பொதுமக்கள் எல்லையில்லா மகிழ்ச்சியடைவர் என்பதைக் கூறவும் வேண்டுமோ?

21-4-47 திங்கள் 22-4-47 செவ்வாய் ஆகிய இரண்டுநாள்களிலும் சென்னை ஹைகோர்ட்டில் நீதிபதிகள் ஹாப்பல், ஷகாபூதீன் ஆகியவர்கள் முன்னிலையில் கிருஷ்ணன்—பாகவதர் அப்பீல்வழக்கு நடைபெற்றது. கிருஷ்ணன்—பாகவதர் சார்பில் தோழர் வி. எல். எதிராஜ் அவர்களும், தோழர் வி. டி. ரங்கசாமி அய்யங்கார் அவர்களும் ஆஜரானார்கள். சர்க்கார் தரப்பில் அட்வகேட் ஜெனரல் கே. ராஜா அய்யர் ஆஜரானார். இரண்டு நாள்கள் இருதரப்பிலும் நல்ல வாதம் செய்யப்பட்டது. தோழர் வி. எல். எதிராஜ் அவர்களின் வாதம் மிகக்குறிப்பிடத்தக்க முறையிலிருந்தது.

25-4-47 வெள்ளியன்று காலை 11-30 மணிக்கு நீதிபதிகள் தோழர்கள் கிருஷ்ணன்—பாகவதர் ஆகிய இருவரும் விடுதலை செய்யப்பட்டனர் என்ற செய்தியை வெளியிட்டார்.

உடனே ஹைகோர்ட்டுக்கு முன்னால் கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் மகிழ்ச்சியின் மிகுதியால் பெருத்த ஆரவாரம் செய்தனர்.

பின்னர் 1-30 மணிக்குக் கிருஷ்ணன்—பாகவதர் ஆகிய இரு தோழர்களும் சிறைச்சாலையிலின்று வெளியில் கொண்டுவரப்பட்டனர். அங்கு ஏற்கனவே கூடியிருந்த கடல்போன்ற ஜனத்திரள், பெருத்த மகிழ்ச்சியுடன் 'கிருஷ்ணனுக்கு ஜே! பாகவதருக்கு ஜே! எதிராஜுக்கு ஜே" என்று பெருத்த ஆரவாரம் செய்தனர். கிருஷ்ணன்—பாகவதர் ஆகிய இருவருக்கும் சென்னை திராவிடர் கழகத்தின் சார்பிலும், மற்றும் பல சங்கங்களின் சார்பிலும், தனிப்பட்ட மக்களாலும் மாலைகள் சூட்டப்பட்டன.

டோம். ஆனால் அவர்கள் இக் கொடுமையை எதிர்க்கவும், வட நாட்டான் வியாபாரப் பெருக்கை ஒழிக்கவும், ஒரு புதிய படையையாவது திரட்ட வேண்டாமா?

எனவே இன்றைய காங்கரஸ் யோக்கியதை சந்தி சிரிக்கும் நிலைக்கு வந்துவிட்டபடியாலும், மேலும் அதன் வேலையும் முடிந்துவிட்டதனாலும் நம் நாட்டைப் பொறுத்தவரை அதாவது திராவிட நாட்டுத் தனி அரசுக்குக் காங்கரசிலுள்ள திராவிடர் அனைவரும் இன்று முதல் வேற்றுமைகளை விட்டு, சமூகப் பொருளாதார லட்சியத்தை அடிப்படையாகக் கொண்டு வேலை செய்து வரும் திராவிடர் கழகத்தில் சேர்ந்து பணியாற்றி நீங்களே நாளை ஆட்சியின் அதிபதிகளாகவும் இருக்க வாருங்கள்! பார்ப்பனீயத்துக்கும் வட நாட்டு ஆதிக்கத்துக்கும் அடிமைப்பட்ட வாழ்வும், பதவியும், ஆண்ட சமுதாயத்தினராகிய நமக்கு அழகாகாது, நிலை பெறாது. அத்துடன் மக்களுக்கும் பயன் தராது என்பதை எடுத்துக்காட்டுகிறோம். இதைத்தான் திராவிடர் கழகத்தினரும் தலைவர் பெரியார் அவர்களும் கூறுகின்றனர். இவை காங்கரஸ் திராவிடருக்கு இனியும் ஏன் கசப்பாகயிருக்க வேண்டும்? வாருங்கள் எனதருமை காங்கரஸ் திராவிடரே! நம்நாட்டுக்கு நல்லரசு அமைப்போம்; ஏழைமக்களுக்கு இன்பத் திராவிடத்தை அளிப்போம்.

திருப்பூர் சந்தாதாரர்கட்கு அறிவிப்பு

என்னுடைய விடுதலை, குடியரசு, திராவிடநாடு ஏசன்சி உரிமையை இன்னொருவருக்குத் தர இருப்பதால் எக்காரணத்தைக் கொண்டும், வேறு யாரிடமும் சந்தா தொகையைக் கொடுக்கவேண்டாம். மேலும் மூன்று மாதத்திற்கு மேல், பாக்கி வைத்துள்ள தோழர்கள் தயவுசெய்து பாக்கியைத் தந்து உதவுமாறு கோருகிறேன்.

வ. இராசன்,
ஏஜண்டு, திருப்பூர்.

மொழிவாரியாக மாகாணம் பிரிக்கப்படுதல் வேண்டுமா?

(வள்ளல்)

மொழிவாரியாக மாகாணம் பிரிக்கப்படுதல் வேண்டும் என்ற பிரச்சினை கொஞ்சகாலமாக எழுப்பப்பட்டு, இப்போது சட்டசபையில் விவாதிக்கப்பட்டு வருகிறது. மொழிவாரியாக மாகாணம் பிரிக்கப்படுவதால் நாட்டிற்கு நன்மை கிட்டுமா என்பதை நாட்டின் நலத்திலே நாட்டமாக உள்ள ஒவ்வொருவரும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற பிரச்சினையை முதன் முதல் நாட்டில் எழுப்பியவர்கள் திராவிடர் கழகத்தினர்தான் என்பதை எவரும் மறுக்கமுடியாது. 'தமிழ்நாடு தமிழருக்கே' என்று அன்று பெரியார் ராமசாமி அவர்களும் அவருடைய தோழர்களும் கூறிய போது 'எலிவளை எலிக்கே' என்று ஏளனம் செய்தார்கள். அந்நேரத்தில் அவ்வேளனத்தைச் சற்றும் பொருட்படுத்தாது 'எலிவளை எலிகளுக்குத்தான், அது பூனைகளுக்கு அல்ல' என்பதை எல்லா வகையாலும் பெரியார் அவர்களும் மற்றவர்களும் நன்கு விளக்கிக்காட்டினார்கள்.

'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற பிரச்சினை அன்று எழுந்ததற்கு முதற்காரணம், தமிழ்நாட்டைத் தமிழர்களல்லாத பார்ப்பனர்கள் சூழ்ச்சிகரமாகக் கைப்பற்றிக்கொண்டு தமிழர்களைப் பல அல்லல்களுக்கு ஆட்படுத்திவருவது தான். இவ்வுண்மையைப் பெரியார் அவர்கள் எடுத்துக்காட்டிய போது அவர் வகுப்புவாதத்தைப் புகுத்துகின்றார், ஒற்றுமையைக் குலைக்கப் பார்க்கின்றார் என்றெல்லாம் தூற்றப்பட்டார். தூற்றியவர்கள் யார் என்று நினைக்கின்றீர்கள்? இப்போது 'தமிழ்நாடு தமிழருக்கே' 'தமிழ் மாகாணம் தனியாகப் பிரிக்கப்படுதல் வேண்டும்' என்றெல்லாம் பேசுகின்றார்களே அவர்கள்தான். 'எலிவளை எலிகளுக்கே' என்ற சொற்றொடரைப் பொதுமேடைகளிலே எடுத்துக்கூறி ஏளனம் செய்தார்களே அவர்கள்தான்!

அன்று ஏளனம் செய்த இவர்கள் இன்று ஏன் எதைக் கூறி ஏளனம் செய்தார்களோ அதையே முக்கிய பிரச்சினையாகக் கொள்ளவேண்டும்? அன்று அவர்கள் உணரவில்லை பார்ப்பனர்களின் ஆதிக்கத்தை. உணர்ந்தவர்களானாலும் உண்மையை வெளிக்குக்கூற அச்சம். ஆனால் இன்றைய காலம் வேறு. அவர்கள் தங்கள் உள்ளம் உணர்ந்ததை வெளிப்படுத்த வேண்டிய நிலைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளனர். உள்ளத்தில் பல ஆண்டுகளாக அடக்கப்பட்டுக் கிடந்த ஒரு பிரச்சினை இப்போது வெளிக்கிளம்பிவிட்டது. உள்ளபடியே இது போற்றத்தக்க செய்கைதான். என்றாலும் 'தமிழ்நாடு தமிழருக்கே' என்று அன்றுகூறிய பெரியார் 5, 6 ஆண்டுகளாகத் திராவிடநாடு திராவிடருக்கே என்று ஏன் கூறவேண்டும்? இதைத்தான் சிந்தித்துப்பார்க்க வேண்டுகிறோம் காங்கரஸ் திராவிடர்களை.

எந்த அடிப்படையில் 'தமிழ்நாடு தமிழருக்கே' என்று எழுப்பப்பட்டதோ அந்த அடிப்படையைப் பார்ப்பனர்கள் தகர்த்துவிட்டனர். அதாவது பார்ப்பனர் ஆதிக்கத்தை ஒழித்துக்கட்டவேண்டுமென்பதற்காகவே 'தமிழ்நாடு தமிழருக்கே' என்று கூறப்பட்டது. ஆனால் பார்ப்பனர்கள் நாங்களும் 'தமிழ் பேசுகின்றோம் ஆகையால் நாங்களும் தமிழர்களே' என்று கூறத் தலைப்பட்டனர். இங்ஙனம் கூறுவதன்மூலம் இப்போது அவர்கள் எல்லாத் துறைகளிலும் தலைமையிடங்களைக் கைப்பற்றியிருப்பது போல் தமிழ் மாகாணம் பிரிந்தவுடனும் எல்லாத்துறைகளையும் கைப்பற்றப் பார்க்கிறார்கள். எனவே 'வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் ஒற்றுமையைக் குலைக்கும்' என்று [illegible] பார்ப்பனர்கள் தமிழ் மாகாணம் எனத்

தனியாக ஒரு மாகாணம் திராவிட நாட்டிற்குள் தோன்றுமானால் அங்கேயும் தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்துவர். அப்போது தமிழர்
இப்போதுள்ள இழிநிலையி
கேடுகெட்ட நிலைக்கு வந்து
நேரும்.
மேலும் மாகாணத்தை மொழி
யாகப் பிரிப்பது என்பது இக்
திற்குப் பொருந்தாத ஒரு
லைகை. இன வாரியாக மாகா
த்தைப் பிரிப்பது என்பதுதான்
ற்கை. வரலாற்று உண்மை
லும்; ஆராய்ச்சிகளினாலும்,
ிக அடிப்படையினாலும்,
க்க வழக்கங்களினாலும்,
ழியின் அடிப்படையினாலும்
ர், தெலுங்கர், கன்னடியர்,
ளர் முதலியோர் திராவிட
த்தைச் சார்ந்தவர் என்று
ின்றோம். எனவே இனத்
ஒன்றுபட்ட தமிழர், தெலுங்
கன்னடியர், கேரளர் ஆகி
ருக்குத் தனிநாடு (திராவிட
மிகவும் இன்றியமையாதது.
ி ஆந்திரர்கள் ஆந்திரநாடு
கப்படவேண்டும் என்ற கூக்
ல மிகப்பலமாக எழுப்பி
னரே என்று கேட்கலாம்.
கள் தனி மாகாணம் கோரு
க்குக் காரணம் என்ன
தைச் சிந்திக்கவேண்டும்.
நாட்டில் பார்ப்பனர்கள்
மைப் பீடங்களைக் கைப்
க்கொண்டு தமிழர்களுக்குத்
லை கொடுப்பதுபோன்றே
க்நாட்டிலும் தமிழ்நாட்
பார்ப்பனர் தலைமைப்பீடங்
க் கைப்பற்றிக்கொண்டு
கர்களைத் தொல்லைக்
ுத்துகின்றனர். தமிழ்நாட்
ர்ப்பனர்களின் ஆதிக்கத்
ண்ட ஆந்திரர்கள்
க்கொண்டு தமிழ்நாட்
ளோர் அனைவரும் தமிழ்
டுப் பார்ப்பனர்களைப்
றவர்களே என்று முடிவு
விட்டனர் போலும். என்
அவர்கள் வருங்காலத்தில்
உணர்வார்கள் உண்மை
உண்மையை உணரும்
திலே திராவிடர் கழகத்தார்
கொள்கைதான் தென்
டிற்குத் தேவை என்பதைத்
தெறறெனத் தெரிந்துகொள்வர்.

மேலும் திராவிட கழகத்தார் கோரும் திராவிடநாட்டிற்கும் காங்கரஸ் தமிழர்கள் கோரும் தமிழ் மாகாணத்திற்கும் அடிப்படையில் பலப்பல வேறுபாடுகளுண்டு. காங்கரஸ்காரர்கள் கேட்கும் தமிழ் மாகாணத்தில் வடநாட்டார் தொடர்பு அற்றுவிடும் என்று கூறுவதற்கில்லை. காரணம் தமிழ் மாகாணமெனத் தனியாகப் பிரிக்கப்பட்டாலும் அம்மாகாணத்திற்குத் தலைமை காரியாலயம் டில்லியில்தான் என்பதை ஒவ்வொருவரும் நன்கு உணரவேண்டும். தமிழ்நாட்டுப் பார்ப்பனர்களுக்கு மாத்திரம் போதிய ஆதரவளித்து, அவர்களைக் கைதூக்கிவிடும் வடநாட்டினர் தமிழர்கள் முன்னேற விடார். தமிழர்களுக்கென நல்லதொரு திட்டம் தீட்டி நடைமுறையில் கொண்டுவரவேண்டுமானால் வடநாட்டினரின் குறுக்கீடு வந்துதான் தீரும். காரணம் மேலே குறிப்பிடப்பட்டுள்ளதுபோன்று வடநாட்டவர் ஆரியர்களின் முன்னேற்றத்திற்குத்தான் ஆதரவு அளிப்பார்கள். இது பொய்க் கற்பனை அன்று. இதுவரையில் நடைபெற்றுள்ள ஒவ்வொரு செய்கையையும் இதற்குத்தக்க சான்றாகக் கூறலாம். உதாரணமாக சென்னை மாகாணத்திலிருந்து அரசியல் நிர்ணயசபைக்கு மேலிடத்தாரால் தேர்ந்தெடுக்கப்பட்ட 7 உறுப்பினர்களும் பார்ப்பனர்களே என்பது உலகம் அறிந்த ரகசியம்.

மற்றும் சென்னை மாகாணம் பொருளாதாரத் துறையில் வடநாட்டினருக்கு அடிமைப்படுத்தப்பட்டுள்ளது யாவரும் உணர்ந்த உண்மை. தமிழ் மாகாணம் பிரிந்தால் பொருளாதாரத்துறையில் தமிழ் மாகாணம் அடிமைப்பட்டுள்ள நிலைமை மாறும் என்று கூறுவதற்கில்லை. காரணம் பிரிக்கப்படப் போவதாகக் கூறப்படும் தமிழ் மாகாணத்தின் ஆட்டிவைக்கும் சூத்திரக்கயிறு வடநாட்டினரிடமிருக்குமென்பதுதான். எனவே ஆரிய ஆதிக்கத்திற்கும், வடநாட்டார் சுரண்டலுக்கும், வழிகோலிக்கொடுக்கும் வடநாட்டவரின் தொடர்பை அறுக்கும் வரையில் தமிழன் மனிதனாக வாழமுடியாது என்பது திண்ணம். இதே நிலைதான் பிரிக்கப்படப் போவதாகக் கூறப்படும் ஆந்திர மாகாணத்திலும் உண்டாகும். பின்னர் கன்னடம், கேரளம் ஆகியவற்றைப்பற்றிக் கூறவேண்டியதில்லை.

திராவிடர் கழகத்தார் கோரும் திராவிடநாடு இனத்தை அடிப்படையாகக்கொண்டது. அதற்கு வடநாட்டுத் தலைமைக் காரியாலயம் வழிகாட்டாது. வடநாட்டுத் தொடர்பையே அறவே அறுத்துக் கொள்ளும். எல்லா மக்களுக்குரிய உரிமைதான் பார்ப்பனர்களுக்கும் வழங்கப்படும். வடநாட்டானின் சுரண்டல் வேலை திராவிடநாட்டில் தலைகாட்டாது. பொருளாதாரத் துறையில் வேறு எந்த நாட்டிற்கும் திராவிடநாடு அடிமைப்பட்டிராது. திராவிடநாட்டில் தமிழர், ஆந்திரர், கேரளர், கன்னடியர் முதலிய திராவிடர்கள் சேர்ந்து திராவிட ஐக்கிய ஆட்சி ஏற்படுத்துவர். இனத்தினால் ஒன்றுபட்ட திராவிடரிடை மொழிப்பூசல் எழுவதற்குக் காரணமில்லை.

காந்தியார் கோரும் இராமராஜ்யத்தில் அங்கம்வகிக்கும் தமிழ் மாகாணத்தில் வர்ணாசிரமதர்மம் வந்து குறிக்கிடும், பிறப்பினால் உயர்வு தாழ்வு இன்றுள்ளது போன்று இருந்தேதீரும். ஆனால் திராவிட ஐக்கியக் கூட்டரசில் பிறப்பினால் உயர்வு தாழ்வு என்ற பேச்சே தலைகாட்டாது. ஆண்டான் அடிமை என்ற பேதம் அடியோடு அழிந்துவிடும்.

இனி மாகாணம் மொழிவாரியாக பிரிக்கப்படவேண்டுமென்று கூறுவதில் பொருளே இல்லை. ஒரே மொழியைப் பேசும் மக்கள் பிரிந்து வாழ்வதை உலகத்தில் காண்கிறோம். ஒரே மொழியைப்பேசும் மக்கள் வாழும் பஞ்சாப் இரு பிரிவாகப் பிரிக்கப்படவேண்டுமென்று காங்கரஸ்காரர்களே கூறுகின்றனர். இப்பிரச்சினை எழுந்ததற்குக் காரணம் இரு வேறு சமுதாயத்தார் பஞ்சாபில் வாழ்ந்துவருவதுதான். ஒரே மொழியைப் பேசும் ஆஸ்டிரியா மக்களும், ஜர்மானியரும் இரு வேறு நாட்டினர்களாக உள்ளனர். இதைப்போன்ற பல

உதாரணங்கள் காட்டிக் கொண்டே போகலாம்.

பல மொழிகளைப் பேசும் மக்கள் ஒரே ஆட்சியில் இருப்பதற்கும் சான்றுண்டு. சோவியத் ரஷியாவில் பல மொழியினர் ஒரே ஆட்சிக்குட்பட்டு வாழ்கின்றனர் என்பது கண்கூடு. எனவே மொழிவாரியாக மாகாணம் பிரிக்கப்படுதல் வேண்டும் என்பது பொருந்தாததொரு காரணம் ஆகும்.

ஆகவே பண்டைக்காலந் தொட்டு ஒரே சமுதாயத்தினராய் வாழ்ந்துவரும் திராவிடமக்கள் வெவ்வேறு மொழி பேசுபவர்களாயினும் தங்களுக்குள் பிரிந்து வாழ்வதோ அல்லது வேறு இனத்தவராகிய வடநாட்டினருடன் தொடர்பு வைத்துக்கொண்டு வாழ்வதோ இயற்கைக்கு முரணாகும்.

இவையாவும் திராவிடர் கழகத்தார் இன்று கூறுவதன்று. கடந்த 5, 6 ஆண்டுகளாகக் கூறி வருகின்றனர். இப்போதும் கூறுகின்றனர்; இனியும் கூறுவர். காரணம் தாங்கள் கூறுவது சற்றுக் காலங்கடந்தாவது நடைமுறையில் நடத்திக் காட்டப்படும் என்ற உண்மையை அவர்கள் உணர்ந்திருக்கின்றனர் என்பது தான்.

அன்று தமிழ்நாடு தமிழருக்கே என்றுகூறியபோது அவர்கள் ஏளனம் செய்யப்பட்டனர். ஆனால் இன்று ஏளனம் செய்தவர்களே 'தமிழ் மாகாணம் பிரிதல் வேண்டும்' என்கின்றனர். இன்று திராவிடர் கழகத்தார் 'திராவிடநாடு திராவிடருக்கே' என்று கூறி வருகின்றனர். இப்பிரச்சினையும் முதலில் கூறப்பட்ட பிரச்சினை போன்று கொஞ்சகாலத்தில் வலுவுடையதாகும். இப்போது 'திராவிடநாடு திராவிடருக்கே' என்ற பிரச்சினையைக் கிண்டல் செய்கின்றவர்களே வருங்காலத்தில் 'இப்பிரச்னைதான் தென்னாட்டிற்குகந்த நல்லதொரு பிரச்சினை, எனவே திராவிட நாட்டைத் தனியாகப் பிரித்தல் வேண்டும்' என்று கூறுவர். எல்லாத் துறைகளிலும் பெரியார் இராமசாமி கூறியவற்றையே இப்

போது காங்கிரஸ்காரர்கள் கொண்டு வருவதாகக் கூறுகின்றனர். இந்நாட்டில் 'தாழ்த்தப்பட்டவர்கள் கோயிலுக்குள் நுழையவேண்டும்' என்ற பிரச்சினையை 20 ஆண்டுகளுக்கு முன்னரே முதல் முதலாக எழுப்பியவர் பெரியார் இராமசாமியாவார்கள் என்பதை ஒவ்வொரு காங்கிரஸ்காரரும் உணர்வர். இப்போதுதான் காங்கிரஸ்காரர்கள் இதை ஓரளவில் நடைமுறையில் கொண்டுவர முன்வந்துள்ளனர். அதுகூட மனப்பூர்வமாக முன்வந்துள்ளனர் என்று கூறுதற்கில்லை. காலத்தின் போக்கு பெரியார் அவர்களின் கொள்கையை நடைமுறையில் கொண்டுவரச்செய்துள்ளது. ஜமீன்தார் ஒழிப்புத் திட்டத்தை அந்தக் காலத்தில் மக்களுக்கு எடுத்துக்கூறியவர் பெரியார் என்பதை எவராவது மறுக்கமுடியுமா? இதைப்போன்ற பல சான்றுகள் காட்டிக்கொண்டே செல்லலாம். எனவே திராவிடநாட்டுப் பிரிவினைக் கிளர்ச்சி முழு உருவடையும் வருங்காலத்தில் என்பதை உறுதியாக நம்பலாம். அதற்கு அறிகுறியாக இன்று சட்டசபையிலேயுங்கூட 'தென்னாட்டினருக்குத் திராவிடஸ்தான் தேவை' என்ற பேச்சு எழுப்பியுள்ளது. அப்பேச்சை எழுப்பியவர் ஒரு முஸ்லிம் தோழர். அதற்காக அவருக்கு நாம் நன்றி செலுத்த கடமைப்பட்டுள்ளோம். ஆனால் கைதூக்கி பொம்மைகளாக உள்ள காங்கிரஸ் திராவிடர்கள் இதை யுணரவில்லையே என்பதை நினைக்கும்போதுதான் நாம் வெட்கப்படவேண்டியுள்ளது.

கலை, நாகரிகம், இனம் முதலியவற்றால் ஒன்றுபட்ட திராவிடர்களுக்குத் திராவிடநாடுதான் தேவை என்று முஸ்லிம் நண்பர் சட்டசபையிலே பேசியபோது அங்கு உட்கார்ந்துகொண்டிருந்த பார்ப்பனர்களுக்குத் தூக்கி வாரிப் போட்டிருக்கும். 'ஏதடா இப்பிரச்சினை இங்கும் தலைகாட்டி விட்டது' என்று ஆத்திரப்படுவார்கள். அவர்கள் படும் ஆத்திரம் 'திராவிடநாடு திராவிடருக்கே' என்று திராவிடர் கழகத்தினர் எழுப்பும், பிரச்சினையை ஒழிக்கத் [illegible]

முகமாகவும் நேரிடையாகவும் திராவிடர் கழகத்தினருக்குப் பாதகம் விளைவிக்கவும் செய்யலாம்.

ஆனால் திராவிடர்கள் இதற்கு அஞ்சமாட்டார்கள் என்பது உறுதி. எவ்வித எதிர்ப்பையும் பொருட்படுத்தாத அவர்களுடைய உழைப்பு வருங்காலத்தில் பெரும் பயனை அளிக்கும் என்பது உறுதி உறுதி!!

உயர்நிலைப்பள்ளி ஆண்டுவிழா

சென்னிமலை கொமரப்பா செங்குந்தர் உயர்நிலைப் பள்ளியின் முதலாண்டு நிறைவு விழாவும், பரிசளிப்பு விழாவும் 23-3-47ல் கோவை ஜில்லாபோர்டு உபதலைவராயிருந்த தோழர் ஆர். எம். குமாரசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

பள்ளியின் தாளாளர் (Correspondent) தோழர் எம். பி. நாச்சிமுத்து பி. ஏ., பி. எல்., அவர்கள் அனைவருக்கும் வரவேற்பளித்தார். தலைமை ஆசிரியர் தோழர் எம். பரமேஸ்வரன் எம். ஏ., பி. எல்., எல். டி. அவர்களால் ஆண்டு அறிக்கை வாசிக்கப்பட்டது. ஈரோடு தோழர் எஸ் மீனாட்சிசுந்தரம் பி. ஏ., எல். டி. அவர்களும் ஈரோடு மாகாண உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர் தோழர் எம். ஆர். பெருமாள் எம் ஏ. எல். டி. அவர்களும் முறையே 'சுதந்தர இந்தியாவில் கல்வி', 'கல்வியும் தமிழ்க் கலையின் சிறப்பும்' என்னும் பொருள்கள்பற்றிச் சொற்பொழிவாற்றினர். ஈரோடு டாக்டர் தோழர் எல் கே. முத்துச்சாமி எம். பி. பி எஸ். அவர்கள் பரிசு வழங்கினார். பிறகு தலைவர் முடிவுரைக்குப்பின் நன்றிகூறலுடன் விழா முடிவுற்றது.

கவியின் கனவு

12-4-47 சனிக்கிழமை மைசூர் தனி அரசுத் திராவிடர் கழக வளர்ச்சி கருதி "கவியின் கனவு" என்னும் சீர்திருத்த உதவி நாடகம் சக்தி நாடக சபையாரால் "மாத்ரு பூமி" ஆசிரியரும், அட்வகேட்டுமான தோழர் எம். எல். ஸ்ரீகண்டய்யா பி. ஏ. பி. எல்., அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. தலைவர் அவர்களும், செயலாளர் வெ. நாராயணசாமி அவர்களும் திராவிடர் கழகக் கொள்கைகளை நன்கு விளக்கிப் பேசினார்கள்.

Edited, Printed, and Published by N. Kariveradaswamy at the Tamilian Press, 42, Cutcherystreet, ERODE.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை